# JUDICIAL FORM. 53
# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII–Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI

**Case No. C.C. No. 03/2026**

**Deposition of Witness for Petitioner PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | ராம்பிரகாஷ் |
| **Father's Name** | : | மணிகண்டன் |
| **Village** | : | கரூர் |
| **Taluk** | : | கரூர் |
| **Calling** | : | வனச்சரக அலுவலர் |
| **Age** | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**11.08.2026** **Witness Signature :**

**எதிரிகள் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.30 P.M**

1. நான் தற்போது உதகை வடக்கு வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2023ம் தேதியன்று கீழ் கோத்தகிரி வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது காலை சுமார் 10.00 மணியளவில் நானும், வனவர் பிரகாஷ், வனக்காப்பாளர் செல்வநாதன் மற்றும் வனக்காப்பாளர் தர்மராஜ் ஆகியோர் கீழ்கோத்தகிரி வனச்சரகம், சோலூர்மட்டம் பிரிவு, கெங்கரை காவல் பகுதிக்கு உட்பட்ட பாவியூர் என்ற ஊருக்கு அடுத்து வாகப்பனை சரிவு காப்பக்காட்டில் ரோந்து சென்றிருந்தபோது சுமார் 72 செ.மீ சுற்றளவு கொண்ட சந்தன மரம் ஒன்று வெட்டப்பட்டிருந்தது. அங்கிருந்த

நபர்களிடம் விசாரணை செய்தபோது, வெளியூர் ஆட்களான ஹால்துரை, ரவி, ரங்கசாமி ஆகியோர் வந்து சந்தன மரத்தை வெட்டியிருந்தது தெரியவந்தது. அதன்பின்னர் காலை சுமார் 10.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்ட என்னுடன் இருந்த வனவர் பிரகாஸ் என் முன்னிலையில் ஸ்தல மகஜர் தயார் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகஜர் என் முன்பாக தயார் செய்யப்பட்டதுதான். அந்த ஸ்தல மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஸ்தல மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அதன்பின்னர் அலுவலகம் வந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் அதே நாள் 4.00 மணியளவில் ஹால்துரை சோலூர்மட்டத்தில் இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அவரை அழைத்து வந்து கீழ் கோத்தகிரி வனச்சரக அலுவலகத்தில் வைத்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதன்பின்னர் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மாலை சுமார் 04.40 மணிக்கு என்முன்பாக வனவர் பிரகாஷ் பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின்னர் மாலை சுமார் 05.00 மணியளவில் இவ்வழக்கின் 2ம் எதிரி ரவி என்பவர் ஒன்னட்டி பகுதியில் இருப்பதாக கிடைத்த தகவலை பெற்று அவரை கீழ் கோத்தகிரி வனச்சரக அலுவலகம் அழைத்து வந்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

3. அதன்பின்னர் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மாலை சுமார் 05.30 மணிக்கு என்முன்பாக வனவர் பிரகாஷ் பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின்னர் 1 மற்றும் 2ம் எதிரிகளை பாவியூர் அடுத்த வாகப்பனை சரிவு காட்டில் உள்ள சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்கள். பின்னர் மாலை சுமார் 06.00 மணியிலிருந்து 06.15 மணி வரை ஆஜர் எதிரிகள் 1 மற்றும் 2 சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த புதரில் இருந்து ஆஜர்படுத்திய சந்தன மரக்கட்டை துண்டுகள் நான்கு கைப்பற்றுதல் மகஜர் என்முன்பாக வனவர் பிரகாஷ் தயார் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் 1 மற்றும் 2 எதிரியை என்முன்பாக ஆஜர்படுத்திய சந்தன மரத்துண்டை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 11.08.2026
Judicial Magistrate,
Kotagiri